● ஜே. வி. பி. விடுத்துள்ள அறிக்கை

# ஆயுதப்படையினரின் படுகொலைகளைக் கூறி சு. க, ஐ. தே. க. அரசியல் லாபம் தேடுகின்றன

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 4 - 50

முரசொலி

முரசு 05 ஒலி 158 பிரசோற்பத்தி சித்திரை 22 (05-05-1991) ஞாயிறு

தாம் பதவியில் இல்லாதபோது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக்கட்சியும் படையினரால் கொல்லப்படுபவர்களை வைத்து அரசியல் லாபம் தேடுகிறார்கள் என ஜே. வி. பி இயக்கத்தினர் வெளியிட்டுள்ள பிரசுரம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 1971 இல் கதிர்காமம் அழகி மன்னம்பெரிய இராணுவத்தால் கொல்லப்பட்டதை, அன்று எதிர்க்கட்சியாக இருந்த ஐக்கியதேசியக்கட்சி பெரிதுபடுத்தி அரசியல் லாபம் தேடியது. அதேபோன்று 1989 இல் பத்திரிகையாளர் ரிச்சர்ட் டீ சொய்சா கடத்தப்பட்டு கொலையானதை பெரிதுபடுத்தி சுதந்திரக்கட்சி அரசியல் லாபம் தேடிவருகிறது எனவும் அப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வல்வெட்டித்துறைக் கடலில் கடற்படைக் கப்பல் மீது தாக்கு

## கப்பல் பாரிய சேதம், இரு கரும்புலிகள் வீரமரணம்

வல்வெட்டித்துறைக் கடலில் நிலைகொண்டிருந்த ஸ்ரீலங்கா கடற்படையினரின் பாரிய கப்பல் ஒன்றின் மீது கரும்புலிகள் தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

நேற்று அதிகாலை 1.55 மணியளவில் வல்வைக்கடலில் பல நாட்களாக நிலைகொண்டிருந்த இந்தக் கப்பல் மீது விடுதலைப்புலிகளின் கரும்புலிகளான கப்டன் சிதம்பரம் கப்டன் ஜெயந்தன் ஆகிய இருவரும் வெடிமருந்துகள் நிரப்பிய விசைப்படகில் சென்று மோதினர்.

இதனால் கடற்படையின

— 4 ஆம் பக்கம் பார்க்க

## பி.பி.ஸி. தமிழோசைக்கு கிட்டு வாழ்த்து

"ஈழத் தமிழரின் இன்னலில் தானும் பங்கு பற்றி அவர்களின் இன்னலை உலகுக்கு உடனுக்குடன் அறிவிக்கிறது பி. பி. ஸியின் தமிழோசை"

இவ்வாறு ஐம்பது ஆண்டுகள் பூர்த்தி செய்த பீ. பி. ஸி தமிழோசைக்கு விடுதலைப்புலிகளின் பிரமுகர் கிட்டு வழங்கிய வாழ்த்துரையில் தெரிவித்துள்ளார்.

இவரது வாழ்த்துரையை நேற்றிரவு பி. பி. ஸி ஒலிபரப்பியது ஈழத்தமிழர் இனமும் தமிழோசை கேட்க தவறுவதில்லை இந்த ஓசை மேலும் வளரவேண்டும் உலகெங்கும் கேட்க வேண்டும் உலகுக்கு ஈழத்தமிழரின் இன்னலை அறிவிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## தாண்டிக்குளத்தில் ஹெலிசூடு பிரெஞ் பிரஜைகள் காயம்

வவுனியா - தாண்டிக்குளம் பகுதியில் நேற்று முழுவதும் பரவலாக வான்தாக்குதல்கள் நடாத்தப்பட்டன.

ஹெலிகப்டரில் இருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப்பிரயோகத்தினால் மன்னார் வீதியால் வாகனத்தில் சென்றுகொண்டிருந்த வெளிநாட்டு பிரஜைகள் நால்வர் படுகாயமடைந்து வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டதாக செய்திகள் கூறுகின்றன.

இவர்கள் ஒரு தொண்டர் நிறுவனம் ஒன்றின் பிரதிநிதிகள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

— 4 ஆம் பக்கம் பார்க்க

## ஆனையிறவு முகாமிலிருந்து நேபாம் ஷெல் வீச்சு

ஆனையிறவு இராணுவத்தினர் நேற்று முன் தினமிரவு 11.30 மணியளவில் முகாமிருந்து நேபாம் ஷெல் வீச்சை நடாத்தினர்.

இந்த ஷெல்கள் இயக்கச்சி குடிமனைகளை நோக்கி நடாத்தப்பட்டன. சேதவிவரங்கள் தெரியவரவில்லை. 71

## சாரதி படையினரால் தாக்கப்பட்டதால் ஐ. நா. நிறுவனம் நிவாரணம் அனுப்ப மறுப்பு

மடு அகதிகளுக்குரிய நிவாரண உணவுப் பொருள்களை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயம் (யூ. என் எச் சி ஆர்) அனுப்பவில்லை எனத் தெரிவிக்கப் படுகிறது.

கடந்த சனிக்கிழமை வவுனியாவில் படையினரின் தாக்குதலுக்கு இந்த நிறுவன வாகனங்கள் இலக்காகி, அதன் சாரதி ஒருவர் காயமடைந்த சம்பவமே இதற்குக்காரணம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியாச் சம்பவம் குறித்து அரசுக்கு அறிவிக்கப்பட்டும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாததே இவ்வாறு உணவு அனுப்பப் படாமைக்கு காரணமாம்.

உலக நாடுகளின் யூ. என். எச். சி ஆர் வாகனம் படையினரால் தாக்கப்பட்டது. இதுவே முதற்தடவை எனவும் இந் நிறுவன வட்டாரங்கள் தெரிவித்தன. (74)

## தீவக வயோதிபப்பெண்கள் மூவர் படையினரால் விடுவிப்பு

தீவுப்பகுதியில் இராணுவத்தினரிடம் சிக்கிய மூன்று வயோதிபப் பெண்கள் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டனர்.

— 4 ஆம் பக்கம் பார்க்க

## கிணற்றில் இருந்து எலும்புக்கூடு மீட்பு

புளியங்குளத்தில் உள்ள சரப்பன்காடு என்ற இடத்தில் பத்மநாதன் பத்மராஞ்சன் என்ற இராசமசேகரின் வீட்டுக் கிணற்றில் இருந்து

— 4 ஆம் பக்கம் பார்க்க

## பத்து மாணவர்கள் நேற்று இரத்ததானம் செய்தனர்

யாழ் பெரியாஸ்பத்திரி இரத்த வங்கியில் தனியார் கல்வி நிலையங்களைச் சேர்ந்த பத்து மாணவர்கள் நேற்று இரத்த தானம் வழங்கினர்.

இருபது பேர் இரத்ததானம் செய்யச் சென்ற போதிலும் இரத்த வங்கிக்கு 24 மணி நேர மின்சார வசதியின்மையால் பத்துப்பேரிடமே இரத்தம் பெற முடிந்தது என இரத்த வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன. 74

## 'அதிகரிக்கும் ஆயுதங்களை ஏந்த அதிகளவானோர் முன்வரவேண்டும்'

கடந்த 29 ஆம் திகதி மன்னார் வஞ்சியங்குள மோதலின் போது வீரமரணம் அடைந்த ரோயலின் பூதவுடலும், அங்கு கைப்பற்றப்பட்ட பெருந்தொகையான ஆயுதங்களும் மக்களின் அஞ்சலிக்காக மடுப்பகுதியில் வைக்கப்பட்டது. பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். பின்னர் ரோயனுக்கு அஞ்சலிக் கூட்டமும் இடம் பெற்றது.

மன்னார் பிரதேச அரசியல் நிர்வாக பொறுப்பாளர் தலைமையில் அஞ்சலிக் கூட்ட

— 4 ஆம் பக்கம் பார்க்க

## ஓமந்தைப் பகுதிக்கு இராணுவத்தினர் வந்தனர்

நேற்று முன்தினம் காலை வவுனியா மாணிக்கவளவு பகுதியில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் இரு அணியாக பேயாடிக் கூழான்குளம், ஓமந்தை பகுதிகளுக்கு முன்னேறி வந்தனர், இராணுவத்தினருக்கு உதவியாக இரு பொம்மர்கள், இரு ஹெலிகள், வை - 12 விமானம் என்பன தாக்குதல் நடாத்தின. 71

## மாவிட்டபுரத்திலிருந்து சூடு தெல்லிப்பழையில் ஒருவர் காயம்

நேற்றுக் காலை 8.30 மணியளவில் மாவிட்டபுரம் பகுதியில் இருந்து இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத்தின் முன்பாக க. செல்வராசா (28) என்பவர் காயமடைந்தார்.

இவரது மணிக்கட்டை துளைத்துச் சென்ற துப்பாக்கி குண்டு அடிவயிற்றிலும் காயத்தை ஏற்படுத்தியது.

# மரக்கறிகளைப் பாதுகாக்க குளிரூட்டி தேவையில்லை; உப்பும் நீரும் போதுமானவை! வத்தாளங்கிழங்கிலும் வாழைக்காயிலும் கூட மா தயாரிக்கலாம்!!

கால போகங்களில் அதிக அளவில் விவசாய உற்பத்திப் பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்ற போது அவை சந்தை விலைவாசியைக் குறைப்பதுடன், அவை அழிவுறுவதும் உற்பத்தியாளர்களை அதிகம் பாதிக்கும் விடயங்களாகும். இத்தகைய பாதிப்பில் இருந்து தற்காத்துக் கொள்ளும் முகமாக இத்தகைய பொருள்களை பாதுகாப்பாக்கிச் சேகரித்து வைத்துப் பயன்படுத்தும் சில வழிகளை தருகின்றோம்.

கத்தரிக்காய், பாகற்காய், முருங்கைக்காய் ஆகியவை அதிக அளவில் உற்பத்தி செய்யப்படும் காலங்களில் இவற்றை ஒரே அளவான துண்டுகளாக நறுக்கி இரண்டு நிமிடம் உப்பு நீரில் போட்டு பின் மூன்று நிமிடம் கொதிநீரில் போட்டு, அதன் பின் வெயிலில் மேடைகளில் உலர விட வேண்டும். உலர்ந்த இக்காய்கறிகளை காற்றுப் புகாத பாத்திரங்களில் சேமித்து வைக்கலாம். இவற்றை உபயோகிக்கும் போது நீரில் ஊறவைத்து வழமைபோல் உபயோகிக்கலாம்.

சாம்பல் மொந்தன், கறி மொந்தன் போன்ற வாழைக்காய்களை கொதி நீரில் சுமார் மூன்று நிமிடம் போட்டு, பின் தோலை நீக்கி வெயிலில் உலர விடலாம், உலர்ந்த இவற்றை மாவாக்கி அரிசிமா, கோதுமை மா, போன்றவற்றுடன் கலந்து தேவையான உணவுப் பொருளை ஆக்கிக் கொள்ளலாம்.

அறுவடை செய்யப்பட்ட வத்தாளங்கிழங்குகளை சுமார் ஒரு வாரத்திற்கு நிழலில் உலர் காற்று படக்கூடியவாறு பரவிவிட்டு பின்னர் உலர்ந்த மணலில் அவற்றை புதைத்து சுமார் மூன்று வாரகாலத்திற்கு விட்டு வைத்த பின் இவற்றை தோல் நீக்கி துண்டுகளாக வெட்டி வெயிலில் உலர விட்டு சேமிக்கலாம். தேவையான காலங்களில் உலர விட்டு இடித்து மாவாக்கி அரிசி, கோதுமை மாவுடன் கலந்து உணவுப் பண்டங்களைத் தயாரித்துக் கொள்ளலாம்.

தக்காளிப்பழம் அதிக அளவில் உற்பத்தியாகும் காலத்தில் அவற்றினைத் துண்டுகளாக வெட்டி மண் பாத்திரத்தில் அல்லது அலுமினியப் பாத்திரத்தில் அவற்றை மூடக்கூடிய அளவுக்கு நீர் விட்டு கொதிக்க வைத்து பின் உரித்து கூழாக்கி தோலையும், விதையையும் நீக்க அரித்து அல்லது துணியை உபயோகித்துக் கூழை பெறலாம். அதற்கு ஒரு தேக்கரண்டி (வெட்டப்பட்ட அளவு) சிற்றிக்கமிலம் சேர்த்து கொதிக்க வைத்து பின் சோடியம் பென்சோயேற் ஒரு தேக்கரண்டி (வெட்டப்பட்ட அளவு) கலந்து, உலர்ந்த தூய சாடிகளில் இட்டு காற்று நீக்கி அடைத்து வைக்க வேண்டும். இது பலமாதம் இருப்பில் வைக்கலாம். தேவையான போது தக்காளிப் பழரசம், ஜாம் முதலியன செய்துகொள்ளுதற்கு உபயோகிக்கப்படலாம்.

-தமிழீழ ஆய்வு நிறுவனம்

# யாழ் மருந்துக்களஞ்சியம் காலி!

## வைத்தியசாலைகளுக்கு 2ஆம் கட்ட விநியோகம் இன்னும் இல்லை

யாழ் மாவட்டத்திலும், கிளிநொச்சி மாவட்டத்திலுமுள்ள அரசாங்க வைத்திய சாலைகளில் இவ்வருட இரண்டாம் கந்தாயத்திற்கான மருந்து வகைகள் இது வரை விநியோகிக்கப்படவில்லை.

இதனால் பல வைத்தியசாலைகளில் மருந்து தட்டுப்பாடு நிலவுகின்றது. யாழ் சுகாதார திணைக்களத்தின் மாவட்ட மருந்துக் களஞ்சியத்தில் கையிருப்பில் போதுமான மருந்து வகைகள் இல்லாத காரணத்தால் கடந்த ஏப்ரல் மாதத்தில் வழங்கப்பட வேண்டிய இவ் வருட இரண்டாவது கந்தாயத்திற்கான மருந்து வகைகளை வைத்திய சாலைகளுக்கு வழங்க முடியாது இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

யாழ் பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் என். கனகசபை அண்மையில் கொழும்பு சென்று இப் பிராந்திய அரசாங்க வைத்திய சாலைகளுக்கு இரண்டாவது கந்தாயத்திற்கு தேவையான மருந்து வகைகளை தாமதமின்றி அனுப்பி வைக்குமாறு சுகாதாரத் திணைக்கள உயர் அதிகாரிகளை நேரில் சந்தித்து வலியுறுத்திக் கேட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (31)

## 'அமெரிக்கத் தொழிலாளர் போல் தமிழ்மக்களும் போராட வேண்டும்'

"ஒரு முதலாளி தனது தொழிலாளியின் உழைப்பை எவ்வாறு உறுஞ்சுகிறாரோ அதேபோலவே எமது உரிமைகளை மண்ணை சிங்களதேசம் கபளீகரம் செய்துள்ளது."

இவ்வாறு பண்டிவிரிச்சானில் நடைபெற்ற மே தினக் கூட்டத் தில் தலைமை உரையாற்றிய மடுப்பிரதேச அரசியல் நிர்வாக பொறுப்பாளர் இமையன் கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர்; அமெரிக்காவிலும் தொழிலாளர் முதலாளிகளுக்கு எதிராக போர்க்கொடி தூக்கியதுபோல சிங்கள அரசுக்கு எதிராக நாம் போராடவேண்டும். அமெரிக்காவில் எட்டு மணி நேரம் வேலை செய்ய அனுமதி கிடைத்திருப்பதுபோலநாமும் சுதந்திரமாக இருந்து கொள்ள வேண்டும் என்றார்.

## சாம்பியனானது

காரைநகர் தோப்புக்காடு விளையாட்டுக்கழகம், வலி மேற்கு உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் சாம்பியன் வெற்றிக் கேடயத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

இறுதிப் போட்டியில் காரைநகர் தோப்புக்காடு விளையாட்டுக் கழகமும் காரை. விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டன. இவ் இறுதிப் போட்டியில் காரைநகர் தோப்புக்காடு விளையாட்டுக்கழகம் 3-0 கோல்களைப்போட்டு வலி மேற்கிலேயே முதலாவதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. (12)

## நன்றிநவிலல்

தாயக மீட்பிற்காக 25-04-91 இயக்கத்தில் இணைந்து சில தினங்களிலேயே (30-04-91) வீரமரணமெய்திய எமது ஏக புத்திரன் செல்வன்

**காமினியின்**

நினைவு நிகழ்ச்சியில் பங்குபற்றியோர்க்கும், ஏனைய உதவிகள் செய்தோர்க்கும் எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பியசேனாதேவி
மாலினி பேக்கரி
கொழும்புத்துறை

05021

## எழுந்திடும் 'உணர்ச்சி'

மூழங்காவில் ம. வி. விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தினரும், கலாசாரப் பிரிவினரும் இணைந்து நடித்த எழுந்திடும் உணர்வுகள் என்னும் நாடகம் மு அக்கிமுகாமில் பல இடங்களில் அரங்கேற்றப்பட்டது.

## 45ஆம் நாள் நினைவலைகள்



**கப்டன் அப்பன் [ச. சிறிதரன்]**

(நாவற்குழி கிழக்கு)
(கைதடி நாவற்குழி பிரதேச வட்டப்பொறுப்பாளர்)

| வீரஜனனம்: | வீரமரணம்: |
|---|---|
| 30. 11. 1972 | 21. 03. 1991 |

மண்ணுக்காய்ப் போராடி
மக்களுக்காய் உயிர்நீத்த
எங்கள் அன்புச்செல்வமே!
அப்பன் எனும் நாமம் அழியாதோ
இத்தப்பாரினிலே

21-03-91 அன்று மன்னார் சிலாவத்துறை இராணுவ முகாம் தகர்ப்பின்போது வீரமரணமடைந்த எங்கள் அன்புச் செல்வத்தின் நினைவாக.

-குடும்பத்தினர்

05022

### தமிழீழக் காவல்துறை

## பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பம்

காவலர்களுக்கான தகைமைகள்:

1. வயது எல்லை 18 வயது முதல் 30 வயது வரை
2. உயரம் 5 அடி 6 அங்குலம்
3. கல்வித்தகைமை எட்டாம் வகுப்பு முதல் க. பொ. த. (சாதாரணம்) க. பொ. த. (உயர்தரம்) வரை.

விண்ணப்பதாரிகள் இம்மாதம் 7-5-91 இற்கு முன்பு தமிழீழ விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியின் யாழ் பிரதேசக்காரியாலயத்தில் சான்றிதழ் பிரதிகளுடன் சமுகமளிக்கவும்.

பொறுப்பாளர்
தமிழீழக் காவல்துறை

05018

## தமிழீழ காவல் துறை பதவி வெற்றிடம்

1. கணக்கு லிகிதர்

வயது : 25 - 45.

தகைமை: கணக்குத் துறையில் குறைந்தது 5 வருட அனுபவம் இருத்தல்வேண்டும்

2. நிர்வாக உத்தியோகத்தர்

தகைமை: நிர்வாகத் துறையில் அனுபவம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

பொறுப்பாளர்
தமிழீழக் காவல்துறை

05017

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
விவசாயபீடம்
கிளிநொச்சி

## பதவி வெற்றிடம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கு 1991. 06. 10 ஆம் தேதி வரை விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

விவசாயப் பொறியியல்/ பயிராக்கவியலில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I/- சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II

சம்பள அளவுத் திட்டம்

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I - ரூபா 9. 600 - 8X250-11, 600/ - மாதமொன்றுக்கு.

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II - ரூபா 8, 000 - 5X 250 - 9, 250/- மாதமொன்றுக்கு.

மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப்படிவங்களும் விவரங்களும் இப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப்பதிவாளர் (தாபனங்கள்) அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களைத் தபாலில் பெற விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுய முகவரியிட்டு 23×10 ச.மீ. அளவுடைய தபாலுறை அனுப்பப்படல் வேண்டும்.

அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் அந் நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும் / அல்லது அனுபவத்தையும் கவனத்திற்கொண்டு சம்பள அளவுத்திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

- பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1991 05.02

05023

## நிதானம்!...வேகத்தில் மட்டுமல்ல உயிர் துறப்பதிலும்தான்

எதிலும் நிதானம் என்று பெயர் பெற்ற ஆமை உயிர் துறப்பதிலும் நிதானம் காட்டுகின்றது இதன் ஆயுட் காலம் 300 முதல் 400 ஆண்டுகள் ஆகும்.

யானைகளை நன்றாகப் பராமரித்தால் 100 ஆண்டுகள் வாழும். முதலைகளை அவற்றின் இஷ்டப்படி விட்டால் 300 ஆண்டுகள் வரை வாழும் கழுகுகள் 200 ஆண்டுகள் வரை வாழும். திமிங்கிலத்தின் ஆயுட்காலம் எம்மை அவரவைக்கும் 500 முதல் 1000 ஆண்டுகள் வரை சீவிக்குமாம். ஆனால் ஆறறிவு மனிதர்களோ......? (ப. 10)

# உயர்தர விசேட பரீட்சை வட, கிழக்கில் இடைநிறுத்தம்!

வடக்குக் கிழக்குப் பகுதியில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தர விசேட பரீட்சை இடைநிறுத்தப்பட்டுள்ளதாகப் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாளை 6ஆம் திகதி திங்கட்கிழமை முதல் இறுதிநாளான 18ஆம் திகதி வரை நடைபெறவிருந்த பரீட்சைகளே இடைநிறுத்தப்பட்டுள்ளன.

க. பொ. த. உயர்தர விசேட பரீட்சைக்கான இரண்டாம் தொகுதி வினாத்தாள்களைக் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டப் பரீட்சை இணைப்பு நிலையங்களுக்கு எடுத்துச் செல்ல முடியாதிருப்பதினாலேயே வடக்குக் கிழக்கில் இப்பரீட்சை இடைநிறுத்தப்பட்டுள்ளதாகப் பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் அறிவித்துள்ளார்.

வினாத்தாள்கள் இப்பகுதிகளுக்குக் கொண்டு செல்லப்பட்டதும் பரீட்சை மீண்டும் ஆரம்பிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த மாதம் 23 ஆம் திகதி ஆரம்பமான விசேட பரீட்சை நேற்று நான்காம் திகதி வரை 10 தினங்களே நடைபெற்றுள்ளது. மேலும் 10 தினங்களுக்கு பரீட்சைகள் இடம்பெற வேண்டியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## யாழ் மாவட்டப் பாடசாலைகள் 10ஆம் திகதி ஆரம்பமாகும் என அறிவிப்பு

கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தர விசேட பரீட்சை பின்போடப்பட்டதை அடுத்து யாழ் மாவட்டப் பாடசாலைகள் 2 ஆம் தவணைக்காக 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மீண்டும் திறக்கப்படவுள்ளதாக யாழ் பிரதேசக் கல்விப் பணிப்பாளர் ஆர்.சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார்.

முன்னர் 20 ஆம் திகதியே பாடசாலைகள் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்ட போதும் க.பொ.த உயர்தர பரீட்சைகள் பின்போடப்பட்டதால் குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் பாடசாலைகளை ஆரம்பிக்க வேண்டியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பரீட்சைகள் மீள ஆரம்பிக்கப்படும்பொழுது பரீட்சை நிலையங்களாகச் செயற்படும் 53 பாடசாலைகள் தவிர்ந்த மற்றைய பாடசாலைகளில் வகுப்புகள் தொடர்ந்து நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (70)

### வீடியோவில் மேதினக் காட்சி

சித்தன்கேணியில் மேதினக் காட்சிகள் சம்பந்தமான வீடியோ படக்காட்சி அண்மையில் இடம்பெற்றது.

இக்காட்சிக்கு முன்னர் இலாவத்துறைத் தாக்குதல் சம்பந்தமான காட்சியும் காண்பிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (12)

## கூட்டுறவு உயர்தரப் பயிற்சி; 15 ஆம் திகதி வரை விண்ணப்பிக்கலாம்

யாழ் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் கூட்டுறவு ஊழியர் தராதரப்பத்திர உயர்தரப் பயிற்சி (1991) பெறுவதற்கு கூட்டுறவு ஊழியர்களிடமிருந்தும் தகுதிபெற்ற தனிப்பட்டவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கூட்டுறவு ஊழியர்கள், கூட்டுறவு ஊழியர் தராதரப் பத்திர சாதாரண பரீட்சையில் சித்தியடைந்திருப்பதோடு மூன்று வருடங்கள் தொடர்ச்சியாக சேவை செய்திருத்தல் வேண்டும். வெளி விண்ணப்பதாரிகள் க.பொ.த (உ.த) பரீட்சையில் நான்கு பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை ரூபா ஐந்து செலுத்தி இல. 16 மணிக்கூட்டு வீதியிலுள்ள யாழ் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்பு விண்ணப்பித்தவர்களும் தொடர்பு கொள்ள வேண்டும். இம்மாதம் 15 ஆம் திகதி வரை விண்ணப்பிக்கலாம். 24 ஆம் திகதி நேர்முகப்பரீட்சை நடைபெற்று 3. 6. 91 இல் பயிற்சிக்கான விரிவுரைகள் ஆரம்பமாகும்.

## சிவில் போக்குவரத்து விமானங்களை இந்தியா உள்ளூரில் தயாரிக்கும்

இந்தியாவின் சிவில் விமானப் போக்குவரத்துக்குத் தேவையான இலேசான விமானங்கள் இந்தியாவிலேயே தயாரிக்கப்படவுள்ளன.

பாரத் கனரக மின்சாதன நிறுவனம் இந்த உற்பத்தியில் ஈடுபடவுள்ளது.

இதன் முதற் கட்டமாக இரு இருக்கைகள் கொண்ட விமானங்களை இந்த நிறுவனம் ஆரம்பத்தில் தயாரிக்கவுள்ளது.

இதற்கான வடிவமைப்பு இந்திய சிவில் விமானப்போக்குவரத்து தலைமையகத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளது.

இத்தரக விமானமொன்று ஏற்கனவே வெற்றிகரமாக பரீட்சித்துப் பார்க்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## இடம்பெயர்ந்த தீவக மாணவர்கள் வேறு பாடசாலைகளில் கல்விபயில வசதி

காரைநகர் மற்றும் தீவகப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு குடாநாட்டிலுள்ள பாடசாலைகளில் தற்காலிகமாக கல்வி கற்பதற்கு ஒழுங்குகள் செய்யப்படவுள்ளதாக யாழ் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்த மாணவர்கள் வதியும் இடங்களுக்கு அண்மித்த பாடசாலைகளில் இவர்கள் கல்வியைத் தொடர முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

அடுத்த வெள்ளிக்கிழமை இரண்டாம் தவணைக்காக மீண்டும் பாடசாலைகள் ஆரம்பமாகும்பொழுது இடம் பெயர்ந்தவர்களுக்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

குறிப்பிட்ட பாடசாலைகளில் இடம் பெயர்ந்தவர்களுக்கான வகுப்புகள் மாலை 12.30 முதல் 4.30 வரை நடாத்தப்படும்.

இதே வேளை பரீட்சை நிலையங்களாக இயங்கும் பாடசாலைகளில் இடம் பெயர்ந்தோரை தங்களைப் பதிவு செய்துகொள்ளுமாறும் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (70)

## யாழ் வந்த ரயில் பயணிகள் வவுனியாவில் ராணுவத்தால் பணயம் வைப்பு

வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் இராணுவத்தினர் தமது பாதுகாப்பிற்காக பெருந்தொகையான கொழும்பில் இருந்து வந்த பயணிகளை பணயம் வைத்திருப்பதாக அங்கிருந்து வரும் ஊர்ஜிதப்படுத்தாத செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த வியாழக்கிழமை புகையிரதம் மூலம் வவுனியாவை வந்தடைந்த பயணிகளே இவ்வாறு பணயம் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ப-85)

### பணிப்பாளர்கள் விசேட கூட்டம்

சகல உதவிக் கல்விப்பணிப்பாளருக்கான விசேட கூட்டம் நாளை காலை 10மணிக்கு யாழ் கல்வித் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

தீவகத்திலிருந்து இடம்பெயர்ந்த மாணவர்களுக்கான வகுப்புகளை நடாத்துவது பற்றியும், இடம்பெயர்ந்தோர் வதியும் பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது பற்றியும் இக்கூட்டத்தில் ஆராயப்படும் என கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (70)

### விவசாயிகளுக்கு கடனுதவி

சித்தன்கேணிக் கலைநகர் நெருஜி ஐக்கிய தாணய சங்கத்தினர் உப உணவு உற்பத்தியில் ஈடுபடும் சங்க உறுப்பினர்களுக்குக் கடந்த மாதம் ஆயிரம் ரூபா வீதம் கடனுதவி செய்துள்ளனர்.

## வடபகுதிக்கு ஏற்ற புதியரக நெல் கிளிநொச்சியில் 48 ஏக்கரில் செய்கை

வடபிராந்திய காலநிலைக்கு ஏற்ற, கூடிய விளைவு தரக்கூடிய நவீன நெல்வகையொன்றினை யாழ் பல்கலைக்கழக விவசாயபீடம் அறிமுகம் செய்துள்ளது.

தற்பொழுது கிளிநொச்சியில் 48 ஏக்கர் நெற்காணியில் இந்த நெல்லினம் பயிரிடப்பட்டுள்ளது.

அறுவடையின் மூலம் கிடைக்கும் விதைநெல் கமநலச்சேவை நிலையங்கள் மூலம் உள்ளூர் விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளதாக விவசாயபீட வட்டாரங்கள் தெரிவித்தன.

## பின்தங்கிய பகுதிகளுக்கு 26 குடும்பநல சேவையாளர்கள் நியமனம்

பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் கடந்த வருடம் பயிற்சி பெற்ற இருபத்தாறு பேர் குடும்ப நல சேவையாளர்களாக இவ்வார இறுதியில் பின்தங்கிய கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளுக்கு நியமிக்கப்படவுள்ளனர்.

இவர்களுக்கு ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் உதவி வழங்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இவ்வருடத்திற்கான புதிய தாதியர் பயிற்சி நெறிக்கு நாற்பத்தொன்பது மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ப-11)

## அதிபர் பதவியுயர்வு போட்டிப்பரீட்சையை வடகிழக்கில் நடாத்தக் கோரிக்கை

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் 3 க்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சைக்குரிய பரீட்சை நிலையங்களை வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் திறுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என இலங்கைதமிழ் ஆசிரியர் சங்கம் கோரியுள்ளது.

இது தொடர்பான மகஜர் ஒன்று ஜனாதிபதி, கல்வி அமைச்சர், கல்வி ராஜாங்க அமைச்சர், பரீட்சை ஆணைக்குழுத்தலைவர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க நிர்வாகிகளும் இப்பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் 500 க்கு மேற்பட்ட ஆசிரியர்களும் இம்மகஜரில் கையொப்பமிட்டுள்ளனர்.

கல்வி நிர்வாக சேவைக்கான திறந்த பரீட்சை கடந்த மாதம் கொழும்பில் நடாத்தப்பட்டபோது வடக்கு, கிழக்கில் இருந்து பெரும்பாலான விண்ணப்பதாரிகள் கலந்து கொள்ளவில்லை. எனவே வடக்கு, கிழக்கு மாகாணத் தமிழர்களின் கல்வி நிலையைக் கருத்திற்கொண்டு திறந்த போட்டிப் பரீட்சைக்கான விசேட போட்டிப் பரீட்சையை வடக்கு, கிழக்கு மாகாணத்தில் நடாத்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் இந்த மகஜரில் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (12)

## கொழும்பில் மகாநாடு

கூட்டுறவுப் பணிப்பாளர்களுக்கான மகாநாடு ஒன்று இன்று காலை கொழும்பில் இடம்பெறவுள்ளது.

ஜனாதிபதி கலந்துகொள்ளவுள்ள இக் கூட்டத்தில் நாடு முழுவதிலுமிருந்து கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள், பணிப்பாளர்கள் மற்றும் பாடசாலைக் கூட்டுறவுச் சங்க நிர்வாக சபையினர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

## லண்டன் தேம்ஸ் நதிக்கரையில் இருந்து உலகெங்கும் 'தமிழோசை'

லண்டன் பி. பி. ஸி. தமிழோசையின் பொன்விழாவையொட்டித் தற்பொழுது தமிழோசையில் பொன்விழா சிறப்பு நிகழ்ச்சி தொடர்ச்சியாக ஒலிபரப்பப்பட்டு வருகின்றது.

இந்த நிகழ்ச்சியில் தமிழோசையில் ஆரம்ப காலத்தில் பணியாற்றியவர்களின் பேட்டிகளும், ஆரம்பகாலத்தில் இடம்பெற்ற முக்கிய நிகழ்ச்சிகளின் சில பகுதிகளும் இடம்பெறுகின்றன.

லண்டன் தேம்ஸ் நதிக்கரையில் அமைந்துள்ள பி பி ஸி. உலக ஒலிபரப்புக் கலையகத்தில் இருந்து 1941 ஆம் ஆண்டு மே மாதம் 3 ஆம் திகதி முதல் முதலாகத் தமிழில் நிகழ்ச்சியொன்று ஒலிபரப்பப்பட்டது.

அன்று முதல் வாரத்தில் வியாழக்கிழமைகளில் மட்டும் 'செய்திமடல்' தமிழில் ஒலிபரப்பப்பட்டது. அதன் பின்னர் 1948 இல் பாரதியின் கவிதை அடியிலிருந்து தமிழோசை என்ற பெயர் பி. பி. ஸி. யின் தமிழ் ஒலிபரப்புக்கு இடப்பட்டது.

தமிழோசையின் ஆரம்பத்தில் பணிபுரிந்தவர்களில் அநேகமானோர் இலங்கையைச் சேர்ந்தவர்கள். கொழும்பு வானொலியில் பணிபுரிந்தவர்கள் இரண்டாம் உலக மகாயுத்த காலத்தில் இலங்கைக் கடிதம் என்ற ஒரு நிகழ்ச்சியும் தமிழோசையில் இடம்பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது,

# ஸ்ரீமாவோ பேசிய கூட்டத்தில் மின்சாரம் நிறுத்தப்பட்டது

புத்தசமயம் புனிதமானது. அதன் சமயக் கோட்பாடு களைப் பின்பற்ற வேண்டியதே பற்றி அதனை வைத்து அரசி யல் லாபம் தேடக்கூடாது. ஐக்கிய தேசியக் கட்சியினர் இதனையே செய்கின்றார்கள்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவி திருமதி ஸ்ரீ மாவோ பண்டாரநாயக்க பலாங் கொடையில் நடைபெற்ற தேர் தல் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

திருமதி பண்டாரநாயக்க பேசிக்கொண்டிருந்த போது திடீரென மின்சாரம் நிறுத் தப்பட்டதும் குறிப்பிடத்தக் கது தொடர்ந்துபேசிய அவர் "ஐக்கிய தேசியக் கட்சியை வளர்த்தவர்கள் இன்று அக் கட்சியில் இருந்து வெளியேற் றப்படுகின்றனர். உதாரண மாக காமினி திஸநாயக்கா வுக்கு நடந்ததை அறிவீர்கள் இன்னும் பன்னிரண்டு பேர் கட்சியில் இருந்து வெளியேற் றப்பட்டுள்ளனர்" என்றார்.

# கொழும்புப் பயணிகள் திரும்பி வருகின்றனர்

கொழும்பு நோக்கிச் சென்ற பல பயணிகள் மீண்டும் திரும்பி வருகின்றனர். வவுனி யாப் பகுதியில் ஏற்பட்டு வரும் இராணுவ நடவடிக் கையையடுத்து பயணத்தைத் தொடர முடியாமல் கடந்த இரு தினங்களாகத் திரும்பி வருகின்றனர்.

இதே வேளை பல பயணி கள் மாங்குளம், கிளிநொச்சிப் பகுதிகளில் தங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது. 38

# சூதாட்டம் நடாத்துவோர் அதிகவரிசெலுத்தவேண்டும்

குதிரைப்பந்தயம், சூதாட் டம் ஆகியவற்றை நடாத்து வோர் மீதான வரியை அதி கரிப்பதற்கான சட்டமூலம் வர்த்தமானியில் பிரசுரமாகி யுள்ளது.

இப் புதிய சட்ட மூலத்தின் படி குதிரைப்பந்தயத் தொழிலை நடத்தும் ஒருவர் ஐந்து லட்சம் ரூபா வரி செலு த்த வேண்டும் எனத்தெரிவிக் கப்பட்டுள்ளது.

சூதாட்ட தொழிலை நடத் தும் ஒருவர் ஐம்பது லட்சம் ரூபா வரி செலுத்த வேண்டும் இந்த புதிய வரி அதிகரிப்பு (ஏட்ரல்) முதலாம்திகதி முதல் அமுலுக்கு வருவதாக சட்ட மூலத்தில் குறிப்பிடப்பட்டுள் ளது.

இச் சட்டமூலம் பாராளு மன்ற அங்கீகாரத்துக்காக விரைவில் சமர்ப்பிக்கப்படும். ப.6

# பங்களாதேஷில் மீட்புப் பணி மந்தகதியில் கோடிக்கணக்கானோர் திறந்த வெளிகளில் அவலம்

கடும் புயலினால் மிகப் பெரிய அளவில் பாதிக்கப்பட் டுள்ள பங்களாதேஷில் மீட் புப்பணி மிகவும் மந்தகதி யிலேயே இடம்பெற்று வரு கிறதாகச் செய்திகள்தெரிவிக்கின் றன.

நேற்று முன்தினம் பங்களா தேஷில் வீசிய சூறாவளிக் காற்று ஹெலிகொப்டர்கள் மூலமான மீட்புவேலை மேற் கொள்ளப்படுவதையும் விமான மூலம் உணவுபோடு வதையும் முற்றாகவே பாதித் ததாகவும் அறிவிக்கப்படு கின்றது.

போதியளவு ஹெலிகொப் டர்கள் இன்மையும் மீட்பு வேலைகளைப் பாதிக்கச் செய் துள்ளன

பங்களாதேஷில் பாதிக்கப் பட்ட 16 மாவட்டங்களில் சுமார் ஒருகோடிக்கும் கூடு தலான மக்கள்கடந்த 5 தினங் களாக திறந்தவெளிகளி லேயே தங்கியுள்ளனர்.

இதே வேளை பங்களாதே ஷில் இறந்தோரின் தொகை இரண்டு லட்சமாக அதிகரித் திருப்பதாகவும் பல தீவுகள் தொடர்ந்தும் நீரில் மூழ்கித் தொடர்புகள் எதுவும் அற்ற நிலையிலேயே இருப்பதாக வும் ஏஜென்சிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சுகாதாரப் பணிப்பாளரிடம்

# 5 லட்சம் ரூபா நஷ்ட ஈடு கோரி வைத்தியர் வழக்குத் தாக்கல்

பதிவு செய்யப்பட்ட உதவி வைத்திய பரீட்சையில் சித்தி யெய்திய பெண்மணி ஒருவர் கொழும்பு சுகாதாரப் பணிப் பாளரிடமிருந்து ஐந்து லட் சம் ரூபா நஷ்ட ஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்துள் ளார்.

இவருக்கு அரசாங்க ஆஸ் பத்திரிகை நியமனம் வழங் காமல் தோட்டப்பகுதியில் பணிபுரியுமாறு நியமிக்கப் பட்டதாலேயே இவ்வாறு நஷ்ட ஈடு கோரியுள்ளார்.

பிரதிவாதிகளாக சட்டமா அதிபரும், கொழும்பு சுகா தாரப்பணிப்பாளரும் இவ் வழக்கில் குறிப்பிடப்பட்டுள் ளனர்.

பல்கலைக்கழக மாணவர்கள்

# அகதிகள் முகாம் ஒன்றை பராமரிக்க முடிவு

யாழ்ப்பாணத்திலுள்ள அகதி முகாம் ஒன்றைப் பொறுப்பேற்றும் பராமரிப்ப தென யாழ் பல்கலைக்கழக மாணவர் பேரவைமுடிவெடுத் துள்ளது.

நேற்றுக் கைலாசபதி அரங் கில் நடைபெற்ற அனைத்துப் பீட மாணவர்களுக்கான விசேட கூட்டத்திலேயே இம் முடிவெடுக்கப்பட்டது.

இவ் அகதி முகாமைப் பரா மரிப்பதற்கென பல்கலைக் கழக மாணவர் தொண்டர் அமைப்பும் உருவாக்கப்பட்டு வருகின்றது. ப-12

# கிளிநொச்சி டிப்போ ஊழியருக்கு ஆறு மாதங்கள் சம்பளம் இல்லை

வட பிராந்திய போக்குவரத் துச்சபை கிளிநொச்சிசாலை ஊழியர்கள் பலருக்கு கடந்த ஆறு மாதங்களாக சம்பளம் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இவர்களை கடமைக்கு சமுகமளிக்குமாறு நிர்வாகம் பணிப்புரை விடுத் துள்ளதாகவும் தெரியவருகிறது. (38)

# 400 விவசாயக்குடும்பங்களுக்கு ஒக்ஸ்பாம் நிறுவனம் 'கடனுதவி

பூநகரி- கரியாலை நாகபடு வானில் உள்ள 400 கிராம விவசாயக் குடும்பங்களுக்கு சிறுபோக விளைச்சலை ஊக் குவிக்கும் பொருட்டு 500 ரூபா பெறுமதியான விதை நெல்,400 ரூபாபெறுமதியான பசளை என்பன 'ஒக்ஸ்பாம்' நிறுவனத்தால்கடனடிப்படை யில் வழங்கப்பட்டது.

மனித முன்னேற்ற நடு நிலையத்தின் ஊடாக வழங் கப்பட்ட இந்தக் கடனை அறு வடைகாலத்தின் போது 900 ரூபாவுக்குரிய நெல்லைக் கொடுத்து திருப்பித்தரவேண் டும் எனவும் தெரிவிக்கப்பட் டுள்ளது. (ப-35)

# பென்சன்பணம் வழங்கப்படுகிறது

ஓய்வூதியருக்கான பென்சன் கிளிநொச்சி - கரைச்சி தெற்கு பல நோ. கூ. சங்க கிராமிய வங்கியில் பணமாக வழங்கப் பட்டுவருகிறது. ப-6

# வன்னிப்பகுதியில் இருந்து மக்கள் இடம் பெயர்வு

கடந்த சில தினங்களாக வன்னிப்பகுதியில் குடியிருப் புப் பகுதிகளை நோக்கி விமா னங்கள் குண்டுகளை வீசி வருவதினால் பொதுமக்கள் இடம் பெயர்ந்து வருவதாகக் அங்கிருந்து வருவோர் தெரி வித்தனர்.

கனகராயன் குளம், புளியங் குளம், புதூர், மன்னகுளம் பகுதிகளில் உள்ளவர்களே இடம்பெயருகின்றனர்.

அப்பகுதிகளில் பல வீடுகள் சேதமடைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 38

# மடு முகாமுக்கு மாணவர்கள்

யாழ் பல்கலைக்கழக மாண வர் மட்டத்திலான மருத்து வக்குழு வொன்று மிக விரை வில் மடுவில் உள்ள அகதி முகாமிற்குச் செல்லவுள்ளது.

இக்குழு அங்குள்ள அகதி களுக்குத் தேவையான அத்தி யாவசிய மருந்துப் பொருள் களையும் இங்கிருந்து எடுத் துச் செல்லும். ப-12

# தீவுப்பகுதியில் ஷெல் தாக்குதல்

தீவுப்பகுதியில் சரவணை சின்னமடு, புளியங்கூடல் ஆகிய பகுதிகளை நோக்கி நேற்று நண்பகல் முதல் பரவ லாக ஷெல் தாக்குதல் இடம் பெற்றுவருகின்றன.

இதனால் சில வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும் கால்நடைகள் இறந்துள்ளன தாகவும் தெரியவந்துள்ளது.

வேலிகள் எரிவதாகவும் பனைமரங்கள் தறிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படு கிறது 74

# தவறவிடப்பட்ட சிறுவன்

பூநகரியில் தனது பெற்றோ ரைத் தவறவிட்ட தேவ தாசன் மகேந்திரன் (13)என்ற சிறுவன் நாவற்குழியில் அநா தரவாக நிற்பதாக தெரிவிக் கப்படுகிறது. இவர் வேலணை 7ஆம் வட்டாரத்தைச் சேர்ந் தவர். ப-5

# ஆஸ்பத்திரி அபிவிருத்தி மத்திய குழு

மந்திகை அரசினர் ஆஸ் பத்திரியின் அபிவிருத்தி நட வடிக்கைகளுக்காக வட மராட்சிப்பகுதி மூன்று உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளி லிருந்து தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் கொண்ட மத்திய குழு அமைக்கப்பட் டுள்ளது. 15

# இடர் நிவாரணம் வழங்க அனுமதி

யாழ் செயலகத்தின் ஆட்ப திவு திணைக்கள ஊழியர் களுக்கு 1989 ஆம் ஆண்டுக் கான இடர் நிவாரணம் வழங்குவதற்கு அனுமதி கிடைத்துள்ளது. 47

# இந்தியஅகதிகளுக்கு இன்று நிவாரணம்

இந்தியாவிலிருந்து திரும் பிய அகதிகளுக்கான நிவா ரண உதவிக் கொடுப்பனவு 07 04.1991 இல் கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் வழங்க ஏற் பாடுகள் செய்யப்பட்டு இருந் தன தவிர்க்க முடியாத கார ணங்களால் அன்றைய தினம் கொடுப்பனவு மேற்கொள்ளப் படவில்லை இன்று 05 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியிலிருந்து நண் பகல் ஒரு மணிவரை கர வெட்டி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் கொடுப்பனவுகள் மேற் கொள்ளப்படும்.

அறிவித்தல் கடிதங்கள் தபால்மூலம் அனுப்பிவைக்கப் பட்டுள்ளன. முன்னர் கிடைக் கப்பெற்ற கடிதங்களுடனும், ஆவணங்களுடனும்கரவெட்டி, பருத்தித்துறை, மருதங் கேணி ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த வர்கள் கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பணி மனையில் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு சமூகமளிக்கும்படி யாழ் செய லக செயதிட்டப் பணிப் பாளர் கேட்டுள்ளார்.

தாண்டிக்குளத்தில்...

இத்தொண்டர் நிறுவனம் பிரெஞ் நாட்டைச் சேர்ந்த எம். எஸ். எப். தொண்டர் ஸ்தாபனம் என அறிவிக்கப் படுகிறது.

இச்சம்பவத்தில் காய மடைந்தவர்களில் ஆபத்தான நிலையில் நாதி ஒருவர் கொழும்பு கொண்டுசெல்லப் பட்டு அறுவைச்சிகிச்சைக்கு உள்ளாக்கப்பட்டார். இவர் தற்போது ஆபத்தான நிலையை தாண்டிவிட்டதாக வும் கூறப்படுகிறது.

இவர்கள் மன்னார் செல் வதற்கான அனுமதியை கொழும்பில் கூட்டுப்படை தலைமையகம் வழங்கியிருந்த தாகவும் வாகனத்தில் செஞ் சிலுவைக் கொடி பறக்கவிடப் பட்டிருந்ததாகவும் பி. பி. ஸி. தெரிவித்தது. 74

வல்வெட்டித்துறை—

ரின் அபாரிய கப்பல் பகுதிச் சேதத்திற்குள்ளானது

இக் கப்பலில் வழமையாக சுமார் 300 கடற்படையினர் தங்கியிருப்பதாகவும் ஒரு மாதத்திற்கு போதுமான ஆயு தங்கள், உணவு என்பவற்றை வழங்கக்கூடிய நிலையில் இருந் ததாகவும் அறியப்படுகிறது.

கடற்படையினரின் கப்பல் தகர்க்கப்பட்டதில் கரும்புலி களான கப்டன் ஜெயந்தன் (சம்புக்குட்டி பத்மநாதன் மட் டக்களப்பு) கப்டன் சிதம்பரம் (பெரியதம்பி சந்திரன் வல் வெட்டித்துற) ஆகியோர் வீர மரணமடைந்தனர்.

இத்தாக்குதலை தொடர்ந்து கடற் பகுதியில் விமானப் படையினரின் விமானங்கள் வட்டமிட்டன. தாக்குதல் சம் பவத்தில் வீரமரணமடைந்த கரும்புலிகளுக்கு நேற்று குடா நாடு எங்கும் அஞ்சலி செலுத் தப்பட்டது. 39,71

கிணற்றில்...

மனித எலும்புக்கூடும், மோட் டோர் சைக்கிளும் கண்டெ டுக்கப்பட்டுள்ளன.

இந்தக்கிணற்றை இறைத்து துப்புரவு செய்யும் போது அடிப்பகுதியில் இவை இருக் கக் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 33

தீவக...

செல்லப்பா பொன்னம்மா (80), மணி (45), தி. இலட் சுமிப்பிள்ளை (72) ஆகியோரே விடுவிக்கப்பட்டவர்களாவர்.

இவர்கள் வரும்போது மூன்று சடலங்களை வீதியில் கண்டதாகவும், சில இடங் களில் துர்நாற்றம் வீசுவதாக வும் தெரிவிக்கப்படுகிறது.

இன்னும் பத்து வயோதிபர் கள் அப்பகுதியில் சிக்கியுள்ள தாகவும், இவர்கள் எழுந்து நடமாடமுடியாதவர்கள் என வும் மேலும் தெரிவிக்கப்படு கிறது. 74

அதிகரிக்கும்—

மொன்றும் அங்கு இடம் பெற்றது.

அங்கு மன்னார் மாவட்ட வி. புலிகள் மாணவர் இயக்க பொறுப்பாளர் நிக்ஸன் இந்த மாவீரரது உடலையும், ஆயு தங்களையும் நாம் கண்காட் சிக்காக உங்கள் முன் வைக்க வில்லை. எங்கள் போராளி களின் தொகையில் ஒருவன் குறைந்து விட்டான். அவனின் இடத்தை இன்றும் பல இளை ஞர் வந்து நிரப்ப வேண்டும் என்பதனையும், எங்களின் ஆயுதங்களின் தொகையிலே இவ்வளவு ஆயுதங்களும் கூடி விட்டன. இவற்றை யாரா வது ஏந்த முன் வரவேண்டும் என்பதை உங்களுக்கு உணர்த் தவும் தான் இவற்றை உங் கள் முன் வைத்தோம் என் றார்.

இதன் பின்னர் மாவீரன் றோயவின் பூதவுடல் பரப்புக் கடந்தான் மாவீரர் மயானத் தில் விடுதலைப் புலிகளின் இராணுவ மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டது.

இப்பத்திரிகை முரசொலி பப்பிளிஷேர்ஸ், (பிறைவேட்) லிமிற், றெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியார்வீதி டச்சு வீதி "லஷ்மி" பில்டிங்"இல் உள்ள அச்சகத்தில் 05-05. 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.